<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 115/2019**

2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வியாழக் கிழமை சாட்சியாகிய முகம்மது ஆரிப் (**PW1**) இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.10.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முகம்மது ஆரிப் **(Recall)** | | | |
| Father /Husband Name | : | ஜெகபர்அலி | Court | : | |
| Village | : | கிளியனூர் | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 32 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

வாதியை மீண்டும் அழைத்து விசாரிக்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு அந்த மனு I.A 03/2024 என கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதி செலுத்திய மின்கட்டண ரசீதுகள் அசல் (எண்ணிக்கை 3) **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்சுல்குதா பெயரில் உள்ள தொலைபேசி கட்டண ரசீதுகள் அசல் ( எண்ணிக்கை 16) **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்சுல்குதாவின் 2005 – 2009 வருடத்திற்கான குடும்ப அட்டையின் அசல் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பூம்புகார் சட்டமன்ற தொகுதியின் 2018 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலின் நகல் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.07.2020 தேதியிட்ட வாதி செலுத்திய குடிநீர் கட்டண ரசீதின் அசல் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.10.1989, 21.03.2022, 20.01.2020 ஆகிய தேதிகளில் சம்சுல்குதா மற்றும் வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் அசல் ( எண்ணிக்கை 3)

**வா.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 02.04.2019 அன்று நான் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டேன் என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வா.சா.ஆ.1ன் அடிப்படையில் எனது பெயரில் மின் இணைப்பு மாற்றப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15ல் உள்ள ரசீதுகள் என்னை குறுக்கு விசாரணை செய்தபிறகு ஏற்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சம்சுல்குதா 3ம் பிரதிவாதி அப்துல் வாஹித் என்பவசரின் மனைவி என்றால் சரிதான். வா.சா.ஆ.16 அப்துல்வாஹித் மனைவி சம்சுல்குதா பெயரில் உள்ள தொலைபேசி கட்டண ரசீது என்றால் சரிதான் ஆனால் இருவரும் ஒரே வீட்டில் இருந்தாலும் கடந்த 30–40 வருடங்களாக எவ்வித பேச்சு வார்த்தையும் இல்லாமல் தனித்தனியே சமைத்து சாப்பிட்டு வந்தனர். அப்துல்வாஹித் அந்த வீட்டில் உள்ள ஒரு ரூமில் மட்டுமே வாழ்ந்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.17 ஆன குடும்ப அட்டையில் சம்சுல்குதா, அவரது கணவர் அப்துல் வாஹித் மற்றும் அவரது பிள்ளைகள் ஐவரின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆன வாக்காளர் அட்டையில் 64 முதல் 70 வரையில் உள்ள பெயர்களான சிராஜ்தீன், இலுருதீன், அஸ்ரப் சப்ரின், அப்துல்வாஹித், சம்சுல்குதா, முகம்மது இலியாஸ், ரசூல்பீவி ஆகியோர் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆனது என்னை குறுக்கு விசாரணை செய்த பிறகு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அப்துல்வாஹித் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது எவ்வாறு சம்சுல்குதா பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். வா.சா.ஆ.20 ல் உள்ள ஒரு ரசீது சம்சுல்குதா பெயரிலும் மற்ற இரு ரசீதுகள் எனது பெயரில் உள்ள ரசீதுகள் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள ரசீதுகள் என்னை குறுக்கு விசாரணை செய்த பிறகு ஏற்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தகப்பனார் முகம்மதுயகைய்யா மற்றும் தாயார் அஸ்மான் நாச்சியா இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 01.10.2021ல் காலமானார் என்றால் சரிதான். அப்துல்வாஹித்தின் உடல் தாவா வீட்டிலிருந்து எடுத்துசென்று கிளியனூர் பள்ளிவாசல் மையவாசலில் புதைக்கப்பட்டது என்றால் சரிதான். அப்துல்வாஹித் மயிலாடுதுறை மற்றும் காரைக்காலில் உள்ள அவரது மகன்கள்

வீட்டில் வசித்து வந்தார். அவர் மயிலாடுதுறையில் இறந்த பிறகு அவரது சொந்த ஊர் என்பதால் தாவா வீட்டிற்கு எடுத்துவந்தனர். தாவா சொத்தானது அப்துல்வாஹித் என்பவரால் கிரயம் பெறப்பட்டு அதில் அவரால் வீடு கட்டப்பட்டு அந்த வீட்டை தன் மகனான 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றாலும் நான் சம்சுல்குதா என்பவர் எனக்கு செட்டில் மெண்ட் எழுதிவைத்ததாக பொய்யான ஆவணங்களை தயார் செய்து வழக்குதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்சுல்குதா எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.